සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

| | | |
|---|---|---|
| ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I<br>கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | 49 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நைல் நதி கலப்பது
(1) செங்கடலில் (2) இந்து சமுத்திரத்தில் (3) மத்தியதரைக் கடலில்
(4) பாரசீக வளைகுடாவில் (5) விக்டோரியா ஏரியில்

**2.** கிரேக்க மொழி குறித்த சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) பாலஸ்தீனாவில் பாரசீகரின் ஆட்சியின் போது கிரேக்க மொழி வளர்க்கப்பட்டது
(2) கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பைபிள் 'தார்கும்' எனப்படுகிறது
(3) கிரேக்க மொழி எபிரேய மொழியுடன் தொடர்புடையது
(4) கிரேக்க மொழி சமஸ்கிருத மொழியுடன் தொடர்புடையது
(5) பபிலோனிய அடிமைத்தனத்தின் போது யூதர்கள் கிரேக்க மொழியினைக் கற்றார்கள்

**3.** நாகரிகத்துடன் தொடர்புடைய புவியியல் அலகு யாது?
(1) மலை (2) கிராமம் (3) காடு (4) சமவெளி (5) நகரம்

**4.** பின்வருவனவற்றுள் சரியான சோடி யாது?
(1) பசிலிக்கா - செவ்வக வடிவம்
(2) வுல்கத்தா - கிரேக்க மொழி
(3) தைபர் நதி - சிரியா
(4) செப்துவாஜிந் விவிலியம் - இலத்தீன் மொழி
(5) பற்றிரிசியன்ஸ் - பினீசியா

**5.** கிறிஸ்தவ வழிபாட்டில் முழந்தாட்படியிடும் வழக்கத்திற்கு வித்திட்ட பண்பாடு யாது?
(1) எகிப்து (2) பபிலோனியா (3) அசீரியா (4) கிரேக்கம் (5) உரோம்

**6.** ஆபிரகாமும், சாரவும் அடக்கம் செய்யப்பட்ட இடம்
(1) எப்ரோன் (2) மம்பிறே (3) பெயர்சீபா (4) ஊர் (5) காரான்

**7.** சவுல் மன்னன் எக்கோத்திரத்தினைச் சார்ந்தவர்
(1) யூதா (2) சிமியோன் (3) ரூபன் (4) பெஞ்சமின் (5) லேவி

**8.** கிரேக்க ஆட்சியாளர் அந்தியோக்கஸ் எப்பிபானாஸ்ற்கு எதிரான போராட்டத்தில் தலைமை வகித்த குழு
(1) எசினீயர் (2) செலுத்தியர் (3) மக்கபேயர்
(4) திருச்சட்ட எழுத்தர் (5) ஜெபுசேயர்

Department of Examinations, Sri Lanka

**9.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - எரோபவாம் அரசனின் ஆட்சி
B - ரெகபேயாம் அரசனின் ஆட்சி
C - இறைவாக்கினர் எலியாவின் பணி
D - அசீரியர்களால் நாடுகடத்தப்பட்டனர்
E - ஆலயத்தின் அழிவு

இவற்றுள் இஸ்ரயேலரின் வட அரசு குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) B, D, E

**10.** திபேரியா நகரினைக் கட்டியெழுப்பிய ஆட்சியாளர் யார்?

(1) ஏரோது அந்திப்பா (2) பிலிப்பு (3) அர்க்கெலா
(4) 1 ஆம் ஏரோது அகிரிப்பா (5) 2 ஆம் ஏரோது அகிரிப்பா

**11.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - தங்கள் சொத்துக்களை பொதுவாக வைத்திருந்தனர்
B - கலிலேயாக் கடலின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்தனர்
C - அமைதியினைக் கடைப்பிடித்தல் அவர்களது பிரதான பண்புகளுள் ஒன்றாகும்
D - அவர்கள் நாசரேத்து இயேசுவின் காலத்தில் இருக்கவில்லை
E - உரோமைய இராணுவத்தினர் அவர்களது இல்லிடங்களை முழுமையாக அழித்தனர்

இவற்றுள் எசீனியர்கள் குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

**12.** பெந்தக்கோஸ்தே திருவிழா கொண்டாடுவது

(1) விடுதலைப்பயணத்தினை
(2) சீனாய் உடன்படிக்கையினை
(3) பபிலோனிய அடிமைத்தனத்தின் நிறைவினை
(4) ஆலயத்தின் அர்ப்பணத்தினை
(5) கிரேக்க ஆட்சியிலிருந்து விடுதலையினை

**13.** யாரது தலைமைத்துவத்தின் கீழ் எருசலேம் ஆலயத்தின் மீள் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது

(1) சைரூஸ் (2) அலெக்ஸ்சாண்டர் (3) செருபாபேல்
(4) சாலமோன் (5) 2 ஆம் தாரியுஸ்

**14.** இயேசுவின் காலத்தில் யூதேயாவின் உரோமை ஆளுநர்கள் தங்கியிருந்த இடமாவது

(1) எருசலேம் (2) மெகித்தோ (3) மசாதா (4) செக்கேம் (5) செசாரியா

**15.** மத்தேயு நற்செய்தியிலுள்ள 'ஒளியும் உப்பும்' படிப்பினை காணப்படுவது

(1) விதை விதைப்பவன் உவமையில் (2) வலை உவமையில்
(3) மலைப்பொழிவு பிரசங்கத்தில் (4) இறுதி இராவுணவில்
(5) இறுதித் தீர்வை பற்றிய பிரசங்கத்தில்

**16.** "காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1 : 15) எனும் கூற்று யாரால் கூறப்பட்டது

(1) இயேசு கிறிஸ்துவினால் (2) திருமுழுக்கு யோவானினால்
(3) பேதுருவினால் (4) சிமியோனினால்
(5) பவுலினால்

**17.** இறையரசின் தன்மையினை வெளிப்படுத்தும் உவமைகளைக் கொண்ட தொகுதியினை தெரிவு செய்க.

(1) புதையல், முத்து, நல்லாயன்
(2) காணமற்போன ஆடு, முத்து, பத்துக் கன்னியர்
(3) புதையல், முத்து, நல்ல சமாரித்தன்
(4) புதையல், முத்து, புளிப்பு மாவு
(5) கடுகு விதை, புளிப்பு மாவு, பத்துக் கன்னியர்



Department of Examinations , Sri Lanka

18. “கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம்” எனும் பகுதி எந்த நற்செய்தியின் முதற் சொற்றொடராகும்
(1) மத்தேயு (2) மாற்கு (3) லூக்கா (4) யோவான் (5) தோமா

19. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்று யாது?
(1) யூதப் பாரம்பரியம் ஒரு புனிதமான பாரம்பரியமாகும்
(2) இயேசு வரிதண்டுபவர்களுடன் நெருக்கமான தொடர்பினைப் பேணி வந்தார்
(3) கி. மு. 722 இல் சமாரியா பபிலோனியரால் கைப்பற்றப்பட்டது
(4) இயேசு சமாரியர்கள் மட்டில் எவ்வித பாகுபாடும் காண்பிக்கவில்லை
(5) யூத சமூகம் வரிதண்டுவோரைப் பாவிகளாகக் கருதியது

20. பாஸ்கு விழா அதன் உச்சத்தை அடைவது
(1) விண்ணேற்றத்தில்
(2) பெந்தக்கோஸ்தேயில்
(3) புனித பவுலின் மனமாற்றத்தில்
(4) எருசலேம் சங்கத்தில்
(5) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்

21. எந்த நகரத்திற்கு சென்றுக் கொண்டிருக்கும் போது, புனித பவுல் உயிர்த்த இயேசுவை முதன் முதலில் சந்தித்தார்?
(1) எருசலேம் (2) தர்சு (3) அந்தியோக்கியா (4) தமஸ்கு (5) எபேசு

22. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - நற்செய்தியினை அறியாதவர்களுக்கு நற்செய்தியினை அறிவித்தல்.
B - எல்லா இனத்தாரையும் சீடராக்குவது.
C - எருசலேம் சங்கத்தின் தீர்மானங்களை அறிவித்தல், வலுப்படுத்தல், உறுதிப்படுத்துதல்.
D - நம்பிக்கையாளர்களை வலுப்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும்.
E - புறவினத்தார் மத்தியில் யூத சட்டங்களை ஊக்குவித்தல்.
இவற்றுள் புனித பவுலின் தூதுரைப் பயணங்களின் குறிக்கோளாக அமைவன முறையே,
(1) A, C, D (2) A, C, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

23. புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறைசார் புண்ணியங்கள் யாவை?
(1) நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு
(2) நம்பிக்கை, எதிர்நோக்கு, ஞானம்
(3) அன்பு, ஞானம், அறிவு
(4) ஞானம், அன்பு, பக்தி
(5) பக்தி, அறிவு, ஞானம்

24. “நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார், கடவுள் தம்மக்களைத் தேடி வந்திருக்கிறார்” (லூக்கா 7 : 16) எனும் இக்கூற்று எந்தப் புதுமையின் பிற்பாடு மக்களால் அறிக்கையிடப்பட்டது?
(1) இரத்தப்போக்குடைய பெண் குணமடைந்தபோது
(2) நயீன் ஊர் விதவையின் மகனை உயிர்த்தெழச் செய்தபோது
(3) அப்பங்கள் பலுகிப் பெருகியதன் பிற்பாடு
(4) கானனீயப் பெண்ணின் மகள் குணம்பெற்றபோது
(5) காற்றினைக் கடிந்து அடக்கிய பிற்பாடு

25. திருத்தந்தையர்கள் அவிஞ்ஞோவில் இருந்த 70 ஆண்டுகள் காலப்பகுதியானது பெயரிடப்பட்டிருப்பது,
(1) எகிப்திய அடிமைத்தனம்
(2) உரோமைய அடிமைத்தனம்
(3) அசீரிய நாடுகடத்தல்
(4) பபிலோனிய நாடுகடத்தல்
(5) கிரேக்க நாடுகடத்தல்

Department Of Examinations , Sri Lanka

**26.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - யூதர்கள் தாவீது போன்ற பலம்பொருந்திய அரசனை எதிர்பார்த்திருந்தனர்.
B - ஏழை தச்சனின் மகனாகிய இயேசுவை மெசியாவாக ஏற்க மறுத்தனர்.
C - கிறிஸ்தவர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியினை அறிவித்தனர்.
D - யூதத் தலைமைகள் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியினால் தங்களது செல்வாக்கு அற்றுப்போய் விடுமென அஞ்சினர்.
E - கிறிஸ்தவர்கள் உரோமை ஆளுநர்களின் தயவினை அதிகமாகப் பெற்றனர்.

இவற்றுள் யூதக் கலாபனை குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**27.** ஐந்தாவது உரோமைக் கலாபனையின்போது கொல்லப்பட்ட மறைசாட்சியர்கள்

(1) புனித யுஸ்தினார், புனித இரேனியுஸ், புனித சிப்பிரியான்
(2) புனித பெலிசித்தா, புனித யுஸ்தினார், புனித சிசிலியா
(3) புனித இரேனியுஸ், புனித பெலிசித்தா, புனித பெப்பேத்துவா
(4) புனித பேதுரு, புனித இரேனியுஸ், புனித சிமியோன்
(5) புனித பவுல், புனித பெப்பேத்துவா, புனித பபியான்

**28.** ஒளி - இருள், ஊனுடல் - ஆவி, வாழ்வு - சாவு போன்ற முரண்பட்ட கருத்துக்களுடன் ஒத்துப்போகின்ற மெய்யியல்

(1) ஸ்தோயிக்கம் (2) எப்பிக்கூரியனிசம்
(3) பிளேற்றோனிசம் (4) அரிஸ்டோட்டலினிசம்
(5) நோஸ்டிக்கம்

**29.** கிறிஸ்தவத்தில் தாக்கம் செலுத்திய உரோமைய நடைமுறைகளாவன

(1) மொழி, கட்டடக்கலை, படிமுறை அதிகார அமைப்பு, வழிபாட்டு மரபுகள்
(2) மொழி, கட்டடக்கலை, போக்குவரத்து, வழிபாட்டு முறைகள்
(3) கட்டடக்கலை, படிமுறை அதிகார அமைப்பு, கல்விக் கொள்கைகள், வழிபாட்டு மரபுகள்
(4) மொழி, கட்டடக்கலை, ஆன்மிகச் சிந்தனைகள், போக்குவரத்து
(5) படிமுறை அதிகார அமைப்பு, உணவுப் பழக்கங்கள், வழிபாட்டு முறைகள், ஆன்மிகச் சிந்தனைகள்

**30.** சரியான சோடியினைத் தெரிவுசெய்க.

(1) அலெக்சாந்திரிய கிளமெண்ட் - திரைபோபுடன் உரையாடல்
(2) ஒரிஜன் - ஆன்மிக வாழ்வின் இரகசியம்
(3) புனித ஜஸ்ரின் - அப்போலொஜியா
(4) எபுசேபியஸ் - கிறிஸ்து வேத ஆதாரம்
(5) தேர்த்துலியன் - பேதக மறுப்பு

**31.** தபோதன வாழ்விற்கு வித்திட்ட காரணிகளுள் சில,

(1) வேத கலாபனைகள், தப்பறையான போதனைகள் திருஅவையின் பிளவு
(2) பலதெய்வ வழிபாடு, சிலை வழிபாடு, சிலுவை யுத்தங்கள்
(3) வேத கலாபனைகள், பலதெய்வ வழிபாடு, திருஅவையின் பிளவு
(4) சிலை வழிபாடு, பலதெய்வ வழிபாடு, திருஅவையின் பிளவு
(5) வேத கலாபனைகள், தப்பறையான போதனைகள், சிலை வழிபாடு

**32.** 'ஜெர்மனியின் பெண் திருத்தூதர்' என அழைக்கப்படுபவர் யார்?

(1) புனித லியோபா (2) புனித அக்னஸ்
(3) புனித அகத்தா (4) புனித புளோரா
(5) புனித கேட்ருட்

Department Of Examinations , Sri Lanka

**33.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - மருத்துவ வசதிகளை வழங்குவது
B - நாகரிக வாழ்வினைக் கற்றுக்கொடுப்பது
C - கிரேக்க, உரோமைய நாகரித்தின் நற்கூறுகளை அளிப்பது
D - வீடற்றவர்களுக்கு இல்லங்களை அமைத்துக் கொடுப்பது
E - அவர்களைக் கிறிஸ்தவராக்குவது

இவற்றுள் ஐரோப்பிய பழங்குடியினரின் மத்தியில் ஆயர்களின் முக்கிய பணி குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

**34.** டொமினிக்கன் துறவற சபையின் இரண்டு முக்கியமான துறவிகள்

(1) புனித பெரிய அல்பர்ட், புனித அந்தோனியார்
(2) புனித பெரிய அல்பர்ட், புனித பேர்னாட்
(3) புனித தோமஸ் அக்குவினாஸ், கால் ரானர்
(4) புனித தோமஸ் அக்குவினாஸ், புனித பேர்னாட்
(5) புனித பெரிய அல்பர்ட், புனித தோமாஸ் அக்குவினாஸ்

**35.** மத்திய காலத்தில் இடம்பெற்ற புதிய நாடுகளின் கண்டுபிடிப்புக்களால் கடற்கரைசார் பண்பாட்டினை உருவாக்கிய மாலுமிகள்

(1) கொலம்பஸ், அமெரிக்கோ வெஸ்புச்சி
(2) வாஸ்கொடகாமா, நிக்கலஸ் கொப்பர்நிகஸ்
(3) கொலம்பஸ், நிக்கலஸ் கொப்பர்நிகஸ்
(4) வாஸ்கொடகாமா, கொலம்பஸ்
(5) வாஸ்கொடகாமா, அமெரிக்கோ வெஸ்புச்சி

**36.** மார்ட்டின் லூதர் ஏற்க மறுத்த போதனைகளாவன.

(1) பரிபூரண பலன், உத்தரிப்பு ஸ்தலம், திருமுழுக்கு
(2) பரிபூரண பலன், உத்தரிப்பு ஸ்தலம், புனிதர்கள்
(3) உத்தரிப்பு ஸ்தலம், பரிபூரண பலன், நற்கருணை
(4) திருச்சபையின் வழுவாவரம், புனிதர்கள், திருமுழுக்கு
(5) பரிபூரண பலன், புனிதர்கள், 'நம்பிக்கை மட்டும்'

**37.** உறுல்ரிச் சுவிங்கிளி எதிர்த்த திருச்சபையின் படிப்பினைகளாவன

(1) துறவற வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், திருமுழுக்கு, திருப்பலி
(2) குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, திருமுழுக்கு, பரிபூரண பலன்
(3) புனிதர்களின் பரிந்துரை, மூவொரு இறைவன், விண்ணேற்றம், திருப்பலி
(4) துறவற வார்த்தைப்பாடுகள், குருக்களின் பிரமச்சாரியம், புனிதர்களின் பரிந்துரை, உத்தரிப்பு ஸ்தலம்
(5) உத்தரிப்பு ஸ்தலம், புனிதர்களின் பரிந்துரை, மூவொரு இறைவன், திருமுழுக்கு

**38.** பங்குப் பாடசாலைகளை ஆரம்பித்த துறவற சபையினர்

(1) பெனடிக்டன் (2) பிரான்சிஸ்கன் (3) அகுஸ்தீனியன்
(4) சலேசியன் (5) சிஷ்ரேசியன்

**39.** பேரரசர் சார்லமென்னால் ஏற்படுத்தப்பட்ட கலை, அறிவியல் மன்றத்தில் முக்கிய பங்காற்றிய துறவியர்கள் இருவர்

(1) தோமஸ் அக்குவினாஸ், அலகுயின் (2) அலகுயின், எயின்காட்டு
(3) பொனவெஞ்சர், பேர்னாட் (4) எயின்காட்டு, பேர்னாட்
(5) டொமினிக், அலகுயின்

**40.** ஸ்பெயினிலுள்ள சலமன்கா கல்லூரிக்கு 'பல்கலைக்கழக' அங்கீகாரத்தை வழங்கிய திருத்தந்தை யார்?

(1) 1 ஆம் ஊர்பன் (2) 2 ஆம் பயஸ்
(3) 13 ஆம் யோன் (4) 4 ஆம் அலெக்ஸ்சாந்தர்
(5) 15 ஆம் பெனடிற்

Department Of Examinations , Sri Lanka

**41.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - கடவுளின் தன்மை அனைத்தும் இறைவனிடமிருந்தே தோற்றம் பெறுகின்றன
B - சிந்தனை ஆற்றலுள்ள மானிடர்கள் கடவுளிடமே இறுதியில் சங்கமமாகின்றனர்
C - சிந்தனை ஆற்றலுள்ள மனிதர்களுக்கு இயேசு கிறிஸ்துவே வழியாகவுள்ளார்
D - மனித அறிவுச் சிந்தனை உதவியினால் படைப்பு, முடிவில்லா வாழ்வினை விளக்குதல்
E - கிறிஸ்தவரல்லாத மக்களுக்கு இறைவனைப் பற்றி விளக்குவது

இவற்றுள் 'சும்மா தியோலோஜிகா' குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

● **42** ஆம், **43** ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் அட்டவணையை பயன்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| A - ஓரத்தோரியோ இசை | B - சிஸ்ரையின் சிற்றாலயம் | C - புளோரன்ஸ் கலை மரபு | D - பிரஸ்கோ | E - கன்னி மேரியின் திருமணக் காட்சி |
| F - இறுதி இராவுணவு | G - லுட்விக்வேன் பீதோவன் | H - மெடோனா | I - நடுத்தீர்வை | J - புனித சொபியா ஆலயம் |

**42.** கலைஞர் மைக்கல் ஆஞ்சலோ குறித்த சரியான சோடி

(1) A, F (2) B, I (3) C, G (4) D, H (5) E, I

**43.** ஓவியர் இரபாயல் சன்சியோ குறித்த சரியான சோடி

(1) A, J (2) B, F (3) C, G (4) D, I (5) E, H

**44.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்துகொண்டே தனித்து இயங்குவது.
B - தலைமைத்துவம் கீழைத்தேய திருச்சபையின் பிதாப்பிதாக்கள் முறையை ஒத்தது.
C - வழிபாட்டு முறையானது மேலைத்தேய மரபு முறைகளைச் சார்ந்தது.
D - தோமையார் கிறிஸ்தவ சபைகளில் தனித்தியங்கும் மிகப்பெரிய சபையாகும்.
E - திருத்தந்தையின் வழிகாட்டலையும், இலத்தீன் வழிபாட்டு முறைகளையும் ஏற்பவர்கள்.

இவற்றுள் சீரோ மலபார் திருச்சபை குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**45.** கி. பி. 1617 இல் போர்த்துக்கேய மிஷனரியினரால் சிலாபத்தில் மேடையேற்றப்பட்ட சமய நாடகமானது

(1) உடன்படிக்கையும் அன்னை மரியாளும்
(2) கிறிஸ்து பிறப்பு
(3) இயேசு, ஆதாம், ஏவாள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு
(4) மூவிராசாக்கள் வாசாப்பு
(5) பேரரசன் கொன்ஸ்ரன்ரைனின் மனமாற்றம்

**46.** அமெரிக்க மிஷனரிமாரால் கிறிஸ்தவ மதப் பிரசாரத்திற்காக அறிமுகம் செய்யப்பட்ட பத்திரிகை யாது?

(1) பக்திப் பிரபோதன (2) கத்தோலிக்கப் பாதுகாவலன்
(3) ஞானார்த்த பிரதீபய (4) உதயதாரகை
(5) மன்னா

**47.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - உரோம கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.
B - காலி புனித அலோசியஸ் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றினார்.
C - மத்தேயு நற்செய்தியை சிங்களத்தில் மொழி பெயர்த்தவராவார்.
D - இலங்கை வரலாறு (Ceylon History) எனும் தலைப்பிடப்பட்ட நூலினை எழுதியவராவார்.
E - இந்தியா செரம்பூர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவராவார்.

இவற்றுள் அருட்பணி S. G. பெரேரா குறித்த சரியான கூற்றுக்களாவன

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

[பக். 7 ஐப் பார்க்க

Department Of Examinations , Sri Lanka

**48.** "முன்னேற்றத்தை வெறும் பொருளாதார அம்சமாகப் பார்க்காது அறநெறிப் பார்வையில் பார்க்க வேண்டும்" எனும் கருத்தினை வலியுறுத்தும் சுற்றுமடல்

(1) தொழிலாளர் நிலைமை
(2) நூறாவது ஆண்டு
(3) திருச்சபையின் சமூக ஈடுபாடு
(4) இறைவனுக்குப் புகழ்
(5) அன்பே கடவுள்

**49.** ஆசிய ஆயர்கள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கின்ற கிழக்காசிய ஆயர்கள் பேரவைகளாவன,

(1) இலங்கை, ஜப்பான், இந்தோனேசியா
(2) ஜப்பான், மியன்மார், பாகிஸ்தான்
(3) இந்தியா, தாய்வான், மலேசியா
(4) சிங்கப்பூர், தென் கொரியா, பிலிப்பைன்ஸ்
(5) ஜப்பான், தென் கொரியா, தாய்வான்

**50.** உலக கிறிஸ்தவ மாமன்றத்தின் (World Council of Churches) முதல் மூன்று பொது அமர்வுகள் நடைபெற்ற இடங்கள்,

(1) புதுடெல்லி, உப்சலா, நய்ரோபி
(2) இவான்ஸ்டன், நய்ரோபி, வன்கூவர்
(3) அம்ஸ்ரடாம், நய்ரோபி, கன்பரா
(4) அம்ஸ்ரடாம், எவான்ஸ்டன், புதுடெல்லி
(5) அம்ஸ்ரடாம், எவான்ஸ்டன், நய்ரோபி

* * *

Department Of Examinations , Sri Lanka

Department Of Examinations , Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) புராதன இஸ்ரயேல் அரசின் பிளவின் பிற்பாடு வட அரசில் இறைவாக்குரைத்த இறைவாக்கினர்கள் **இருவரைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பபிலோனிய அடிமைத்தனம் குறித்த விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) அடிமைத்தனத்திற்கு பின்பு பணியாற்றிய குரு எஸ்ராவின் பங்களிப்பினை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) புராதன இஸ்ரயேலில் முடிக்குரிய ஆட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு வித்திட்ட காரணிகள் குறித்துக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

**2.** (i) யூத சமயப் பாரம்பரியங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) நற்செய்திகளில் காணப்படும் **நான்கு** வகையான புதுமைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஸ்தொயிக்கம் குறித்து சிறுகுறிப்பு எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) யூத திருமணத்தின் பண்புகளை விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) அந்தியோக்கிய கல்லூரியின் சிந்தனையாளர்கள் **இருவரைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆரியத் தப்பறையின் படிப்பினைகள் **நான்கினை** பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(iii) கிறிஸ்தவ துறவற வாழ்விற்கு புனித பக்கோமியஸ் வழங்கிய பங்களிப்பினை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ சீர்திருத்திற்கு வித்திட்ட சமயப் பின்னணியினை விளக்குக. (08 புள்ளிகள்)



Department Of Examinations , Sri Lanka

## பகுதி II

4. (i) 'கிறிஸ்தவ ஒற்றுமை' குறித்த புனித பவுலின் படிப்பினையை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) பலதரப்பட்ட முரண்பாடுகள் நிறைந்த சூழ்நிலையில், சமாதானத்தினைக் கட்டியெழுப்புவதற்கு கிறிஸ்தவ சமூகங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் என்பது குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

5. (i) கிரேக்க கலாசாரத்தின் அடிப்படைப் பண்புகளை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கைப் பண்பாட்டினை விருத்தியடையச் செய்வதில் கிரேக்கக் கலாசாரம் எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்பது குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

6. (i) 'கிரகோரியன் மற்றும் பொலிபோனி' இசையின் பிரதான விடயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) திரு இசை குறித்து இலங்கைத் திருச்சபைகள் எதிர்கொள்ளும் சவால்களையும், அவற்றை மேற்கொள்ள எடுக்கக்கூடிய வழிமுறைகள் குறித்தும் விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க நம்பிக்கையினை பாதுகாப்பதில் புனித யோசப்வாஸ் ஆற்றிய பங்களிப்பினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழ்நிலையில், எவ்வாறு கிறிஸ்தவ நம்பிக்கையினை பாதுகாத்து உயர்த்தமுடியுமென்பது குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

8. (i) உலகக் கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் தோற்றத்தினைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. (10 புள்ளிகள்)

(ii) நாட்டினைக் கட்டியெழுப்புவதில் எவ்வாறு பலதரப்பட்ட கிறிஸ்தவத் திருச்சபைகள் பங்களிப்புச் செய்யலாம் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

* * *

Department Of Examinations , Sri Lanka